Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)



2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 40 | உள்ளூர் - 09.02.2026 | திங்கள் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 54 | * Issue 40 | வெளியூர் - 10.02.2026 | செவ்வாய் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

5,138 பணியிடங்கள்..! பிஎன்பி வங்கியில்!!

அரிய சந்திர மங்கள யோகம்.. இவர்களுக்கு ஜாக்பாட்!


டெல்லியில் பரபரப்பு: வெடிகுண்டு மிரட்டல்...

மக்கள் பணம் வீண்? தொடரும் அமளி!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டம், போளிவாக்கம் ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தூய்மைப் பணியாளர்களுக்கு உணவு வழங்கும் திட்டத்தை மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கும் விரிவுப்படுத்தி தொடங்கி வைத்து, வெப்பக் காப்புப் பையில் (Insulated Thermal Carrying Bag) வைக்கப்பட்ட உணவுக் கலன்களை தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கினார். இந்த விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். சந்திரன், வி.ஜி. ராஜேந்திரன், டி.ஜெ. கோவிந்தராஜன், சுதர்சனம், கிருஷ்ணசாமி, கணபதி, துரை சந்திரசேகர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தா. கார்த்திகேயன், நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பி. மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர் எம். பிரதீப் குமார், தாட்கோ மேலாண்மை இயக்குநர் கே.எஸ். கந்தசாமி, திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பார்லிமெண்ட் பட்ஜெட் கூட்டத்தொடர்: எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியால் லோக்சபா ஒத்திவைப்பு!



புதுடில்லி, பிப். 09–

லோக்சபா இன்று (பிப்ரவரி 09) கூடியதும், இந்தியா–அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் மதியம் 12 மணி வரை சபையை சபாநாயகர் ஓம்பிர்லா ஒத்தி வைத்தார்.

பார்லிமென்ட் பட்ஜெட் கூட்டத் தொடர், கடந்த மாதம் 28ம் தேதி ஜனாதிபதி உரையுடன் துவங்கியது. இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் அரசின் சாதனைகள், எதிர்கால திட்டங்களை விளக்கி, ஜனாதிபதி முர்மு உரையாற்றினார். ஜனாதிபதி உரையின் போதே, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் கூச்சலிட்டு அமளியில் ஈடுபட்டனர். தொடர்ந்து, பிப். 1ம் தேதி மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அடுத்தடுத்த நாட்களில், ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீது விவாதம் நடந்தது. அந்த விவாதத்தை ஆக்கப்பூர்வமாக நடத்த விடாமல், பல்வேறு பிரச்னைகளை எழுப்பி, காங்கிரஸ், திமுக, திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதன் உச்சமாக, காங்கிரஸ் எம்பி ஜோதிமணி உள்ளிட்டோர், பிரதமரின் இருக்கை அருகே சென்று அவரை நோக்கி கோஷமிட்டனர்.

பிரதமர் மீது எம்பிக்கள் சிலர் தாக்குதல் நடத்த திட்டமிட்டதாக கிடைத்த ரகசிய தகவலை அடுத்து, ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம், பிரதமரின் உரை இடம் பெறாமலேயே லோக்சபாவில் நிறைவேறியது. லோக்சபா நேரத்தை எதிர்க்கட்சி எம்பிக்கள் வீணடித்து வருவதாக சபாநாயகர் ஓம்பிர்லா அதிருப்தி தெரிவித்து இருந்தார்.

இந்த சூழலில் லோக்சபா, ராஜ்யசபா ஆகிய இரு அவைகளிலும் இன்று காலை 11 மணிக்கு பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்க உள்ளன. மத்திய பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற இருந்தன. இன்று (பிப்ரவரி 09) கூடியதும், இந்தியா–அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டதால் மதியம் 12 மணி வரை சபையை சபாநாயகர் ஓம்பிர்லா ஒத்தி வைத்தார்.

ராஜ்யசபாவில் எதிர்க்கட்சி எம்பிக்கள் இந்தியா–அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி முழக்கமிட்டனர். அவையில் விவாதிக்க ராஜ்யசபா தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் மறுத்துவிட்டார். தொடர்ந்து மசோதாக்கள் மீதான விவாதம் நடந்து வருகிறது.

“விக்சித் பாரதத்திற்கான வங்கித்துறை”

# இந்தியாவில் மாபெரும் “வங்கித்துறை சீர்த்திருத்தம்”

## உயர்மட்ட குழு அமைப்பு!







புதுடெல்லி, பிப். 09–

மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விரைவில் வங்கி துறை சீர்த்திருத்தங்களுக்கான உயர்மட்ட குழு அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.

விக்சித் பாரத் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வலிமையான மாபெரும் கடன் வழங்கும் நிறுவனங்களை உருவாக்க, விரைவில் ஒரு உயர்மட்டக் குழு அமைக்கப்பட உள்ளது. “விக்சித் பாரதத்திற்கான வங்கித் துறை” என்ற இந்தக் குழு, இதற்கான விரிவான செயல் திட்டத்தை வகுக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பிடிஐ–க்கு அளித்த பேட்டியில், “விக்சித் பாரதத்திற்கான நிதி தேவையை வங்கித் துறை எவ்வாறு திறம்பட வழங்க வேண்டும் என்பது குறித்து இந்தக் குழு வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும் என விரும்புகிறோம்” என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

இக்குழு பொதுத்துறை வங்கிகளின் இணைப்பைப் பரிந்துரைக்குமா என்ற கேள்விக்கு, “அவ்வாறு குறுகிய நோக்கில் பார்க்கக் கூடாது. விக்சித் பாரதத்தின் நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இந்தியாவின் வங்கித் துறை வலிமையாக்கப்பட வேண்டும். அது கடன், நிதி வசதிகள் மற்றும் சாமானிய மக்களைச் சென்றடையும் வங்கிச் சேவைகள் என அனைத்தையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்” என அவர் விளக்கினார். இக்குழு அமைப்பதற்கான காலக்கெடு குறித்துப் பேசிய நிதியமைச்சர், “விரைவில் இதைச் செயல்படுத்துவோம்” என்றார்.

பிப்ரவரி 1 அன்று தனது பட்ஜெட் உரையில், “வங்கித் துறையை விரிவாக ஆய்வு செய்து, இந்தியாவின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ஏற்றவாறு சீரமைக்கும் வகையிலும், நிதி நிலைத்தன்மை, உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலும், ‘விக்சித் பாரதத்திற்கான வங்கித் துறை குறித்த உயர்மட்டக் குழு’ ஒன்றை அமைக்க நான் முன்மொழிகிறேன்” என்று குறிப்பிட்டிருந்தார்.

பொதுத்துறை வங்கி சாரா நிதி நிறுவனங்களில் (NBFCs) செயல்திறனை மேம்படுத்தவும், அவற்றின் செயல்பாட்டு அளவை அதிகரிக்கவும், பட்ஜெட்டில் முதற்கட்டமாக பவர் ஃபைனான்ஸ் கார்ப்பரேஷன் (PFC) மற்றும் ரூரல் எலெக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் (REC) ஆகியவற்றை மறுசீரமைக்கப் பரிந்துரைக்கப்பட்டது. REC, அரசுக்குச் சொந்தமான மின் துறை கடன் நிறுவனமான PFC–யின் துணை நிறுவனம் ஆகும். மின் உற்பத்தி மற்றும் விநியோகத் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதில் இரு நிறுவனங்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

முன்னதாக, மார்ச் 2019–இல், PFC நிறுவனம் மத்திய அரசுக்கு ரூ 14,500 கோடி செலுத்தி, REC லிமிடெடின் பெரும்பான்மையான பங்குகளைக் கையகப்படுத்தியது. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் கொள்கை ரீதியான ஒப்புதலைத் தொடர்ந்து இந்த பங்கு கையகப்படுத்தல் நடந்தது.

PFC மற்றும் REC ஆகிய இரண்டுமே நவரத்னா அந்தஸ்து பெற்ற மத்திய பொதுத்துறை நிறுவனங்களாகும். ஒரே துறையில் செயல்படும் நிறுவனங்களை ஒருங்கிணைக்கும் நோக்கில் இந்த கையகப்படுத்தல் ஒரு முக்கிய நடவடிக்கையாக அமைந்தது. இந்நிலையில், கடந்த வாரம், PFC–யின் இயக்கு நர்கள் வாரியம், வங்கி சாரா நிதி நிறுவனமான REC லிமிடெடை தன்னுடன் இணைத்துக் கொள்வதற்கு கொள்கை ரீதியான ஒப்புதலை அளித்தது. இந்த இணைப்பு முடிவானது, அண்மையில் பட்ஜெட்டில் செய்யப்பட்ட அறிவிப்பிற்குப் பிறகு எடுக்கப்பட்டுள்ளது.




## மறு தணிக்கைக்கு அனுப்பப்படும் ‘ஜனநாயகன்’!

சென்னை, பிப். 09–

நடிகர் ஜோசப்விஜய் நடித்த “ஜன நாயகன் திரைப்படம் தற்போது மறு தணிக்கைக்கு அனுப்ப பட்டுள்ளது. கடந்த முறை படத்தை பார்த்த ஐவர் குழுவினர் மறு ஆய்வில் இடம்பெற மாட்டார்கள் தற்போது இப்படம் தொடர்பான வழக்கு உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

மீண்டும் தணிக்கை வாரியம் செல்வதால் மறு ஆய்வு செய்ய சுமார் 25 நாட்கள் ஆகும். இந்த நிலையில் பிப்ரவரியில் வெளியாகுமா? என கேள்விக்குறியாக உள்ளது

ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளுக்கு மட்டுமே சிறப்பு தொழுகை:

## நிபந்தனையை தளர்த்தக் கோரிய மனு உச்சநீதிமன்றத்தில் தள்ளுபடி!!



டெல்லி, பிப். 09–


ரம்ஜான், பக்ரீத் பண்டிகைகளுக்கு மட்டுமே சிறப்பு தொழுகை நடத்த வேண்டும் என்ற நிபந்தனையை தளர்த்த வேண்டும் என இமாம் உசேன் என்பவர் தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது. திருப்பரங்குன்றம் நெல்லித்தோப்பு தர்காவில் ரம்ஜான், பக்ரீத் அன்று மட்டுமே சிறப்பு தொழுகை என்பதை எதிர்த்து மனு அளிக்கப்பட்டது.



ராணிப்பேட்டையில் அமைக்கப்பட்டுள்ள டாடா நிறுவனத்தின் ஜாகுவார் லேண்ட் ரோவர் கார் உற்பத்தி ஆலையை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இதனை தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், டாடா நிறுவனத்தின் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டார். இதையடுத்து டாடா மோட்டார்ஸ் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட முதல் ரேஞ்ச் ரோவர் காரை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஓட்டி மகிழ்ந்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள், எம்பி, எம்எல்ஏக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மேலும் புதிய ஆலையில் ஆண்டு உற்பத்தி திறன் 2.5 லட்சம் யூனிட்டுகளுக்கு மேல் இருக்கும் என்றும், அடுத்த 5 முதல் 7 ஆண்டுகளில் உற்பத்தி இலக்கும் அதிகரிக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய ஆலை அடுத்த தலைமுறை சொகுசு பிரீமிம் கார்கள் மற்றும் புதிய மின்சார வாகனங்களின் உற்பத்திக்கான மையமாக செயல்படும் என்றும் டாடா மோட்டார்ஸ் நிறுவனம் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
திங்கட்கிழமை 09.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 26-ம் தேதி

# உயரும் புற்றுநோய் பாதிப்பு..



தமிழகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிண்கை உயர்ந்துள்ளது. இதில் சென்னையில் தான் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உலக நாடுகளில் மில்லியன் கணக்கானோர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். புற்றுநோயால் உயிரிழப்புகளும் ஏற்பட்டு வருகிறது. இதற்கு வாழ்க்கை முறை, புகையிலை, உணவு பழக்கம், நோய்த்தொற்றுகள் என பல்வேறு காரணங்கள் சொல்லப்பட்டு வருகிறது. அதே நேரத்தில், புற்றுநோயில் இருந்து பலரும் மீண்டும் வருகின்றன. இந்த நிலையில், இன்று (பிப்ரவரி 4) உலக புற்றுநோய் தினம் கடைபிடிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் புற்றுநோய் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், பிப்ரவரி 4ஆம் தேதி உலக புற்றுநோய் தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்த நிலையில், தமிழகத்தில் புற்றுநோயால் பாதிக்கப்படு பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தகவல் கசிந்துள்ளது.

**தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு அதிகரிப்பு:**

மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகம் நாடாளுமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்தது. அந்த தகவலின் அடிப்படையில், தமிழகத்தில் புற்றுநோய் பாதிப்பு ஒரே ஆண்டில் அதிகரித்துள்ளதாக கூறப்பட்டுள்ளது. அததாவது, தமிழகத்தில் 1,00,097 பேர் புற்றுநோயால் ஒரே ஆண்டில் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஐந்து ஆண்டுகளை காட்டில் 2025ஆம் ஆண்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த 2020ஆம் ஆண்டில் 68,750, 2021ஆம் ஆண்டில் ரூ.76,968 பேரும், 2022ஆம் ஆண்டு 89,265 பேரும், 2023ஆம் ஆண்டில் 92,816 பேரும், 2024ஆம் ஆண்டில் 96,486 பேரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளது. 2025ஆம் ஆண்டில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்தை தாண்டியுள்ளது. 2025ஆம் ஆண்டில் பெண்கள் 53,542 பேரும், ஆண்கள் 46,555 பேரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். சென்னையில் மட்டும் 8,505 பேர் கடந்த 2025ஆம் ஆண்டு புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

காஞ்சிபுரத்தில் 7,295 பேரும், வேலூரில் 6,525 பேரும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். நகர்ப்புறங்களில் அதிக எண்ணிக்கையில் புற்றுநோயால் பாதிக்கப்படுவதற்கு மாசுபாடு, மன அழுத்தம், வாழ்க்கை முறை போன்ற காரணங்கள் ஆகும் என கூறுகின்றனர். இதில், ஆண்கள் வாய் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆண்கள் புகையிலை அதிகம் பிடிப்பதால் இந்த பாதிப்பு ஏற்படுகிறது. அதனைத் தொடர்ந்து, பெருங்குடல், வயிற்று புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றன என அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறப்புகள் எத்தனை?**

பெண்களை பொறுத்தவரை, அவர்களுக்கு மார்பக புற்றுநோய், கருப்பை வாய் புற்றுநோயால் அதிக பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புற்றுநோயின் விழிப்புணர்வு, பரிசோதனையை அதிகப்படுத்துவதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகிறது. புற்றுநோய் முற்றிய நிலையில் கண்டறியப்படுகிறது. இதனால், உயிர் பிழைப்பதும் குறைவதோடு, சிகிச்சை செலவுகளும் அதிகரித்து வருவதாக கூறப்பட்டுள்ளது.

வழக்கமான உடற்பயிற்சி, ஆரோக்கியமான உடல் எடையை பராமரித்தல், புகையிலை மற்றும் மதுவைத் தவிர்ப்பது மற்றும் அவ்வப்போது பரிசோதனைகளை மேற்கொள்வது போன்ற காரணங்களால் புற்றுநோய் ஆபத்தை குறைக்கும் என கூறப்பட்டுள்ளது. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் 10,821 புற்றுநோயால் உயிரிழந்துள்ளனர். கருப்பை, மார்பக புற்றுநோயால் மட்டுமே உயிரிழப்பு ஏற்பட்டதாக தெரியவந்துள்ளது.

# இந்தியாவில் MAGGI 50 ஆண்டுகள்: நினைவுத் தபால் முத்திரை வெளியீடு!



சோலாடி, பிப். 09–

இந்தியாவில் MAGGI 50 ஆண்டுகள் நிறைவு பெற்றதை முன்னிட்டு, நெஸ்லே இந்தியா ஒரு நினைவுத் தபால் முத்திரை வெளியிட்டது. இந்த முத்திரையை நெஸ்லே இந்தியாவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. மணீஷ் திவாரி மற்றும் இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் இணைந்து வெளியிட்டனர். தலைமுறைகள் கடந்து இந்திய வீடுகளில் மக்களை ஒன்றிணைத்த MAGGI இன் பயணத்திற்கான அஞ்சலியாக இந்த முத்திரை அமைந்துள்ளது.

இந்திய அரசின் உணவு பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் கூறுகையில், இந்தியாவின் பதப்படுத்தப்பட்ட உணவு துறை வளர்ச்சியில் MAGGI போன்ற முன்னோடி பிராண்டுகள் முக்கிய பங்கு வகித்த உள்ளதாகவும், 50 ஆண்டுகள் நிறைவு செய்வதற்காக MAGGI ஐ வாழ்த்துவதாகவும் தெரிவித்தார்.

நெஸ்லே இந்தியாவின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திரு. மணீஷ் திவாரி தெரிவித்ததாவது, இந்தியாவில் ஐந்து தசாப்தங்களில் பயணித்த MAGGI மீது மக்களின் நம்பிக்கை, பாசம் மற்றும் அன்றாட இணைப்பு இந்த மைல்கல்லை சிறப்பாக்குகிறது. நாடு முழுவதும் அரவணைப்பு, ஆறுதல் மற்றும் ஒற்றுமையை ஏற்படுத்தும் தருணங்களில் தொடர்ந்து பங்களிப்பதில் நெஸ்லே இந்தியா உறுதியாக உள்ளது.

# அமெரிக்காவில் தேர்தல் சீர்திருத்தங்கள் கொண்டு வரும் டிரம்ப்!



அமெரிக்கா, பிப். 09–

அமெரிக்காவின் அதிபராக டிரம்ப் பொறுப்பேற்ற முதல்நாளில் இருந்து பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

உலக நாடுகளுக்கு வரி விதிப்பதில் மும்முரம் காட்டினார். தற்போது அவரது கவனம் தேர்தல் மீது சென்றுள்ளது. அமெரிக்காவில் தேர்தல் சீர்த்திருத்தங்களுக்கு டிரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.


இது தொடர்பாக அதிபர் டிரம்ப் கூறிருப்பதாவது:– அமெரிக்க தேர்தலில் வாக்கெடுப்பின் போது மோசடி செய்யப்பட்டன, திருடப்பட்டன. நாம் அவற்றை சரி செய்ய போகிறோம். தேர்தல் சீர்திருத்தங்கள், கடுமையான கட்டுப்பாடுகள் தேவை.

* சில சந்தர்ப்பங்களைத் தவிர வாக்காளர்கள் ஓட்டளிக்க அமெரிக்க குடியுரிமைக்கான ஆதாரத்தை காட்ட வேண்டும்.

* அனைத்து வாக்காளர்களும் வாக்காளர் அடையாள அட்டையை காட்ட வேண்டும்.

* மெயிலில் இனி வாக்கு சீட்டுகள் இல்லை. நோயினால் பாதிக்கப்பட்டவர்கள், ராணுவத்தினர் தவிர மற்ற யாரும் வாக்கு சீட்டு முறையில் ஓட்டளிக்க கூடாது. இந்த நடைமுறைகளை அனைத்து குடியரசு கட்சியினரும், பின்பற்றுவதற்காக போராடுமாறு நான் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.

# பாராளுமன்றத்திற்கு வெடிகுண்டு மிரட்டல் - காவல்துறையினர் சோதனை!




டெல்லி, பிப். 09–

பாராளுமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடர் நடந்து வருகிறது. இந்நிலையில், பாராளுமன்றத்திற்கு மின்னஞ்சல் மூலம் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றவளாகம் மற்றும் டெல்லியிலுள்ள பல பள்ளிகளுக்கும் வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

வெடிகுண்டு மிரட்டலை தொடர்ந்து பாராளுமன்றவளாகத்தில் காவல் துறையினர் சோதனை நடத்தினர் சோதனையில் வெடிகுண்டு மிரட்டல் வெறும் புரளி என்பது தெரியவந்துள்ளது.

இன்று காலை 11 மணிக்கு பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் இந்த வெடிகுண்டு மிரட்டல் டெல்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# வார தொடக்கத்தில் உயர்ந்த தங்கம், வெள்ளி விலை!

சென்னை, பிப். 09–

வார தொடக்க நாளான இன்று தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி கிராமுக்கு 230 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் ரூ.14,650–க்கும் சவரனுக்கு 1,840 ரூபாய் உயர்ந்து ஒரு சவரன் ரூ.1,17,200–க்கும் விற்பனையாகிறது.

தங்கத்தைப்போலவே வெள்ளி விலையும் உயர்ந்துள்ளது. கிராமுக்கு 15 ரூபாய் உயர்ந்து ஒரு கிராம் வெள்ளி 300 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

# சேப்பாக்கம் மைதானத்திற்குள் விசிலுக்கு தடை...!

சென்னை, பிப். 09–

2026 டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெற்று வருகிறது. மொத்தம் 20 அணிகள் பங்கேற்கும் இந்தத் தொடரின் 4வது போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின. சென்னையில் உள்ள சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது.

சேப்பாக்கம் மைதானத்திற்கு வரும் ரசிகர்கள் “விசில்” எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்ட சம்பவம் பேசு பொருளானது. சேப்பாகம் மைதானத்திற்குள் மதுபானம், சிகரெட், தண்ணீர் பாட்டில், டிரோன், லேப்டாப் என பல பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய போட்டியின் போது ரசிகர்கள் விசில் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில், மைதானத்திற்குள் ரசிகர்கள் விசில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாதது குறித்து தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் (TNCA) விளக்கம் அளித்துள்ளது. அதன்படி, “சேப்பாக்கம் மைதானத்திற்குள் விசில் தடை செய்யப்பட்டதற்கும் பிசிசிஐ, ஐசிசி மற்றும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. விசிலுக்கு தடை என்ற தகவலை மட்டும் போலீசார் எங்களிடம் தெரிவித்தனர்,” என தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் தெரிவித்துள்ளது.

# டி20 உலகக் கோப்பை தாக்கம்: ரசிகர் பயணத் திட்டங்களை அதிகரிப்பு ஸ்கை ஸ்கேனர் தகவல்!

சென்னை, பிப் 09–

இந்தியா மற்றும் இலங்கையில் மென்ஸ் டி20 உலகக் கோப்பை தொடங்கியுள்ள நிலையில், போட்டி அட்டவணைக்கு ஏற்ப ரசிகர்கள் பயணங்களைத் திட்டமிடுவதால், ஸ்கை ஸ்கேனர் தளத்தில் பிளைட் தேடல்கள் கணிசமாக உயர்ந்துள்ளது. நவம்பரிலிருந்து தொடங்கிய தேடல் அதிகரிப்பு ஜனவரியில் உச்சத்தை எட்டிய தாகவும், கிரிக்கெட் இந்தியர்களின் பயணத் தீர்மானங்களில் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் இந்த புள்ளி விவரங்கள் வெளிப்படுத்துகின்றன.



இந்திய மென்ஸ் டி20 அணித் தலைவரும் ஸ்கை ஸ்கேனர் பிராண்ட் அம்பாசிடராக சூர்யகுமார் யாதவ், ரசிகர்கள் உற்சாகம் அணியின் ஆற்றல் எனக் கூறி, 2024 இறுதிப் போட்டியின் ரசிகர் ஆரவாரத்தை நினைவுகூர்ந்தார். வான்கடேவில் தொடங்கி ஏழு நகரங்களில் நடைபெறும் இந்த உலகக் கோப்பை போட்டிகளில், ரசிகர்கள் மைதானங்களில் நேரடியாக இருப்பார்கள் என்ற நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார். ஸ்கை ஸ்கேனர் இந்தியா வின் டெஸ்டினேஷன் மற்றும் டிராவல் டிரெண்ட்ஸ் நிபுணர் நீல் கோஷ் கூறுகையில், முக்கிய போட்டிகளை மையமாகக் கொண்டு ரசிகர்கள் உள்நாட்டு மற்றும் சர்வதேச பயணங்களைத் திட்டமிடு வதாக தெரிவித்தார். குறிப்பாக பிப்ரவரி 15 அன்று கொழும்பில் நடைபெறும் இந்தியாபாகிஸ்தான் போட்டி போன்ற நிகழ்வுகள், எல்லைத் தாண்டிய பயணத் திட்டமிடலை மேலும் தூண்டிவிட்டது அவர் குறிப்பிட்டார்.

# மதுரை உலா நற்பணி மன்றம் முப்பெரும் விழா!

மதுரை, பிப். 09–

மாநகர் மதுரையில் கடந்த இருபத்து ஐந்து ஆண்டுகளாக தமிழ் வளர்ச்சி, இலக்கியம், திறன் மேம்பாடு, சமூகப் பணி என பல்வேறு தளங்களில் தொடர்ந்து பயணப்படும் மதுரை உலா நற்பணி மன்றத்தின் வெள்ளிவிழா, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு ‘மண்ணைக் காக்கும் மஞ்சள் பை’ என்ற தலைப்பில் நடத்திய கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு பரிசளிப்பு, ஐந்து சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா என முப்பெரும் விழா அதன் தலைவர் ரெ.கார்த்திகேயன் தலைமையில் நேற்று காலை பேல்ர்ஸ் ஹோட்டல் மாநாட்டு அரங்கத்தில் நடைபெற்றது.



செலவி கா.கீர்த்திகா இறைவணக்கம் பாட, செயலாளர் முனைவர் ஆ.த.பரந்தாமன் வரவேற்புரை ஆற்றினார். கௌரி கார்த்திகேயன் குழுவினர் குத்து விளக்கு ஏற்றினர். மதுரை இலக்கியப் பேரவைத் தலைவர் முனைவர் சண்முக திருக்குமரன் அறம் வெல்லும் என்ற தலைப்பில் தொடக்கவுரை ஆற்றினார்.

கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்கலிங்கம் கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவச் செல்வங்களுக்கு பரிசு சான்றிதழ் வழங்கி, ஐந்து சாதனையாளர்களுக்கு விருது வழங்கி ‘மஞ்சள் துணிப்பை சிறப்பு’ என்ற தலைப்பில் 60 நிமிடங்கள் பேசுகையில் சுற்றுச் சூழல் குறித்து இளைஞர்கள் மத்தியில் விழிப்புணர்வு, மாற்றம் நிலையானது தடுமாற்றம் தவறானது.

பொது வாழ்க்கை ஒரு தவம், ஊருக்கு உழைத்திடல் யோகம், எண்ணுவ துயர்வு, தேசத்தைக் காத்தல் செய் என்ற மகாகவி பாரதியின் வரிகள் நம்மை வழி நடத்தும். எண்ணுக தமிழில், எழுதுக தமிழில் என வாழ்பவர்கள் நாம். எனவே பல மொழிகள் கற்றாலும் நமது செம்மொழித் தமிழுக்கு நாளும் அணி சேர்த்திடும் பணியினைத் தொடர்ந்து முன்னெடுப்போம். பட்டினிக்கு ஒரு மனசு, பணத்துக்கு ஒரு மனசு, பழங்கதை மறந்தவங்க பார்வையே ஒரு தினுசு, கொட்டிக் கொட்டி அளப்பதனால் கொஞ்சறது வளர்வதில்லை, கோபுரத்தில் இருப்பத னால் குருவி பருந்தாவதில்லை என்ற கவியரசு கண்ணதாசன் பாடல் வரிகள் இந்த விழிப்புணர்வுக்கு உரம் சேர்த்திடும்.

மனித வாழ்க்கை இன்பம் துன்பம் இரண்டும் கலந்தது, சரியான சிந்தனை, சரியான புரிதல், சரியான பேச்சு, சரியான வாழ்வுமுறை, சரியான முயற்சி என இருக்க வேண்டும். மண்ணைக் காப்பதும் மனித குல மாண்பைக் காப்பதும் அனைவரது கடமை. எனவே இளைய தலைமுறையினர் சாதிப்பதில், புதிய கண்டுபிடிப்புகளில் பேரார்வம் கொண்டு உயர்ந்திட வேண்டும், பிறகு அதனைக் கொண்டாடி மகிழ்ந்திட வேண்டும் என்றார். அரங்கில் இருந்த இருநூறுக்கும் அதிகமானவர்கள் கைகளில் உள்ள செல் போனைப் பார்க்காமல் மிகுந்த ஆர்வத்துடன் கேட்டும் கரவொலி எழுப்பியும் மகிழ்ந்தனர்.

முன்னதாக தியாகத் திருவுருவம் வ உ சிதம்பரனார் சமூக நலப் பேரவைச் செயலாளர் கவிஞர் மீ.ராமசுப்பிரமணி யன், மதுரைக் கல்லூரி வாரியக் குழு உறுப்பினர், குருதிக் கொடையாளர் இல.அமுதன், மனித உரிமைத் தலைவர் எஸ்.ஜே.சைமன் பல்தேசிங், நிலா சேவை மையம் கவிக்குயில் இரா. கணேசன் வாழ்த்துரை வழங்கினர். பொருளாளர் வீர.ஆதிசிவதென்னவன் நன்றி கூறினார். நிகழ்ச்சியை ஆசிரியர் கவிதாயினி எஸ். வனஜா சிறப்பாகத் தொகுத்து வழங்கினார். விழாவின் மிக முக்கியச் சிறப்பு : விருது பெற்றவர்களிடமோ, விழாச் செலவுகள் எனவோ என யாரிடமும் பணம் பெறாமல் மதுரை உலா நற்பணி மன்ற நிறுவனர் மற்றும் தலைவர் அதன் பொருட் செலவை ஏற்றது தமிழ் கூறும் நல்லுலகின் புதிய மைல்கல். ஏராளமான இலக்கிய அமைப்பினர், பள்ளி ஆசிரியர்கள், இலக்கிய ஆர்வலர்கள் பங்கேற்றனர். பங்கேற்ற அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்திருந்தனர். விழா ஏற்பாடுகளை பொன். பாண்டி, மணிகண்டன், வி.காளீஸ்வரன், குடந்தை ரகுநாதன், சண்முகசுந்தரம், மோகன், ரமேஷ் உள்ளிட்ட நண்பர்கள் சிறப்பாகச் செய்திருந்தனர். அன்னைத் தமிழுக்கு அணி சேர்த்திடும் வண்ணம் இந்த முப்பெரும் விழா அமைந்தது.


# விஜயை எந்த நாட்டுக்கு முதல்வராக்க போகிறார் செங்கோட்டையன்? : அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ கேள்வி

சென்னை, பிப். 09–

விஜயை எந்த நாட்டுக்கு முதல்வராக்க போகிறார் செங்கோட்டையன்? என்று அதிமுக முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜூ கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் அவர், “ஏதாவது கல்லூரிக்கு வேண்டுமானால் விஜயை முதல்வர் ஆக்கலாம். எல்லோரும் தன்னை எம்.ஜி.ஆர். என சொல்லிக் கொள்ளலாம், மக்கள் ஏற்க மாட்டார்கள். தேர்தலுக்கு



பின்னர் தவெக என்னவாக போகிறது என்பது இப்போதே தெரிகிறது,”என்றார்.



# அரிய சந்திர மங்கள யோகம்.. இந்த ராசிகளுக்கு ஜாக்பாட்.!



பிப்ரவரி 8, 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில், சந்திரன் துலாம் ராசியில் சஞ்சரிக்கும்போது மிகவும் சக்திவாய்ந்த சந்திர மங்கள யோகம் உருவாகப் போகிறது. சந்திரனின் நான்காம் வீட்டில் செவ்வாய் உச்சம் பெறுவதால், இந்த ஆண்டு ஒரு தனித்துவமான மற்றும் அரிய சந்திர மங்கள யோகம் உருவாகப் போகிறது. இந்த யோகம் மகா பாக்கிய யோகம் என்றும் அழைக்கப்படுகிறது. வருமான வளர்ச்சிக்குரிய அதிகார யோகத்துடன் தொடர்புடைய இந்த யோகம், மேஷம், கடகம், துலாம், தனுசு மற்றும் மகர ராசிக்காரர்களுக்கு இரட்டிப்பு வருமான வளர்ச்சி, திடீர் செல்வச் சேர்க்கை, பிற நிதி ஆதாயங்கள் மற்றும் பதவி உயர்வுகளைக் கொண்டு வரும். இந்த மூன்று நாட்களில் செய்யப்படும் அனைத்து முயற்சிகளும் பலனளிக்கும்.

பிப்ரவரி 8, 9, மற்றும் 10 ஆகிய தேதிகளில் சந்திரன் துலாம் ராசியில் சஞ்சரிக்கும்போது ஒரு அரிய சந்திர மங்கள யோகம் உருவாகிறது. இந்த மகா பாக்கிய யோகத்தின் தாக்கத்தால், மேஷம், கடகம், துலாம், தனுசு மற்றும் மகர ராசிக்காரர்கள் வருமான வளர்ச்சி, திடீர் நிதி ஆதாயங்கள் மற்றும் பதவி உயர்வுகள் போன்ற ராஜ யோகங்களை அனுபவிப்பார்கள்.

**மேஷம்:**

இந்த ராசிக்கு ஏழாம் வீட்டில் சந்திரனும், பத்தாம் வீட்டில் செவ்வாயும் இருப்பதால், சந்திர மங்கள யோகம் உருவாகிறது. இது உங்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகளை வழங்கும். பதவி உயர்வுடன், தொழில் மற்றும் வியாபாரத்தில் உங்கள் செயல்பாடு கணிசமாக அதிகரிக்கும். சிறிய முயற்சியால் நல்ல திருமணம் கைகூடும். பயணங்கள் நல்ல லாபத்தைத் தரும். சொத்துத் தகராறுகள் எளிதில் தீர்க்கப்படும். மதிப்புமிக்க சொத்துக்கள் சேரும். நிலம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**கடகம்:**

இந்த ராசியின் அதிபதியான சந்திரன் நான்காம் வீட்டிலும், செவ்வாய் ஏழாம் வீட்டிலும் இருப்பதால் இந்த சிறப்பு யோகம் உருவாகிறது. இது பல வழிகளில் செல்வத்தை அதிகரிக்கிறது. வங்கிக் கணக்கில் இருப்பு கணிசமாக அதிகரிக்கும். வருமானத்தை அதிகரிக்கச் செய்யப்படும் எந்த முயற்சியும் வெற்றி பெறும். வேலையில் உங்கள் திறமை அங்கீகரிக்கப்பட்டு, சம்பளம் மற்றும் படிகள் உயரும், மேலும் பதவி உயர்வும் கிடைக்கும். தொழில் மற்றும் வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். குழந்தைகள் சிறந்து விளங்குவார்கள்.

**துலாம்:**

இந்த ராசியில், சந்திரன் மற்றும் செவ்வாயின் நான்காம் வீட்டு சஞ்சாரம், சொத்துத் தகராறுகளைச் சாதகமாகத் தீர்த்து, சொத்து மற்றும் நில ஆதாயங்களை ஏற்படுத்தும். தொழில், வேலை மற்றும் வியாபாரத்தின் மூலம் வருமானம் பன்மடங்கு அதிகரிக்கும். சிறந்த வேலைக்கு மாறும் வாய்ப்பு உண்டாகும். வேலையில்லாதவர்களுக்கு அதிக சம்பளம் மற்றும் படிகளுடன் வேலை கிடைக்கும். நிதி விவகாரங்கள் மற்றும் பரிவர்த்தனைகள் மிகவும் சாதகமாக மாறும். எதிர்பாராத விதமாக, வீடு மற்றும் வாகன யோகங்கள் உண்டாகும்.

**தனுசு:**

தனஸ்தானத்தில் இருக்கும் செவ்வாயும், லாபஸ்தானத்தில் இருக்கும் சந்திரனும் பரஸ்பர கேந்திரங்களில் இருப்பதால் இந்த யோகம் உருவாகிறது. இந்த ராசிக்காரர்களுக்கு வருமான வளர்ச்சிக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும். அவர்கள் தொடும் அனைத்தும் பொன்னாக மாறும். எந்த வருமான முயற்சியிலும் வெற்றி பெறுவார்கள். முன்னோர்களிடமிருந்து பரம்பரைச் சொத்து கிடைக்கும். அவர்களின் சொத்துக்களின் மதிப்பு உயரும். செல்வச் செழிப்புக்கும் தானியப் பெருக்கத்திற்கும் வாய்ப்புள்ளது. தொழில் மற்றும் வேலை நிமித்தமாக வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். வேலையில்லாதவர்களுக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் கிடைக்கும்.

**மகரம்:**

இந்த ராசியில் உச்சம் பெற்ற செவ்வாயும், பத்தாம் வீட்டில் இருக்கும் சந்திரனும் ஒருவருக்கொருவர் கேந்திர நிலைகளில் சஞ்சரிப்பதால், வேலையில் அதிகாரம் கிடைக்கும். வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் வந்து சேரும். தொழில் மற்றும் வேலை சம்பந்தமான காரணங்களுக்காக வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். வசதியான குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருடன் திருமணம் நடக்கும் வாய்ப்பு உள்ளது. வருமானத்தை அதிகரிக்க எடுக்கும் எந்த முயற்சியும் வெற்றி பெறும். எதிர்பாராத செல்வம் வந்து சேரும்.


# நாமக்கல் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களின் குறைதீர் கூட்டம்!

நாமக்கல், பிப். 09–

நாமக்கல் மாவட்டத்தில் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களின் குறைதீர் கூட்டம் 12.02.2026 அன்று மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் வகையில் ”சுதந்திரப் போராட்ட தியாகிகள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்களின் குறைதீர்க்கும் நாள் கூட்டம்” 12.02.2026 ஆம் தேதி பிற்பகல் 3.30 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. அதுசமயம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சுதந்திரப் போராட்ட வீரர்கள் மற்றும் அவர்தம் வாரிசுதாரர்கள் அனைவரும் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி துர்காமூர்த்தி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.




## உங்க உதடுகள் இப்படி இருந்தா அசால்ட்டா இருக்காதீங்க..



ஒருவரது அழகை மேம்படுத்தி காட்டுவதில் உதடுகள் முக்கிய பங்கை வகிக்கின்றன. ஆனால் அதை விட உதடுகள் நமது உடல் ஆரோக்கியத்தையும் பற்றியும் வெளிக்காட்டும். ஆனால் இந்த விஷயம் நிறைய பேருக்கு தெரிவதில்லை. பொதுவாக குளிர்காலத்தில் உதடுகள் அதிகமாக வறண்டு, வெடிப்புகள் ஏற்படும். அப்போது அதை தடுக்க உதடுகளுக்கு லிப் பாம்களை பயன்படுத்துவோம். ஆனால் இந்த உதடு வெடிப்புகள் மற்ற காலங்களில், அதுவும் போதுமான பராமரிப்புக்களைக் கொடுத்தும் சரியாகாமல் இருந்தால், அது இதய நோயின் அறிகுறியாக இருக்கலாம் என்பது தெரியுமா? இந்த 5 பழக்கங்களை உடனே கைவிடுங்க.. இல்லன்னா இதய நோய் சீக்கிரம் வந்துடும்.. என்ன நம்பமுடியவில்லையா? ஆம், உண்மையில் நமது உதடுகளும் இதயத்தில் உள்ள பிரச்சனைகளை சுட்டிக்காட்டும். எனவே உதடுகளில் சந்திக்கும் பிரச்சனைகளை ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாது. கீழே ஒருவரது இதயத்தில் பிரச்சனை இருந்தால் அல்லது இதய நோய் இருந்தால் உதடுகளில் எந்த மாதிரியான அறிகுறிகள் தெரியும் என்பது குறித்து கொடுக்கப்பட்டுள்ளன. இந்த அறிகுறிகள் தெரிந்தால், அவற்றைப் புறக்கணிக்காதீர்கள்.

**1. நீலம் அல்லது ஊதா நிற உதடுகள் உதடுகள் நீல நிறத்திலோ அல்லது ஊதா நிறத்திலோ காணப்படுகிறதா?**

அப்படியானால் உடலில் ஆக்ஸிஜன் பற்றாக்குறை உள்ளது என்று அர்த்தம். இதயம் சரியாக செயல்படாத போது உடலில் இரத்த ஓட்டம் மோசமாக இருக்கும். இது இப்படியே நீடிக்கும் போது அது இதய செயலிழப்புக்கு வழிவகுக்கும். எனவே நன்கு ஓய்வு எடுத்த பின்னரும் தலைச்சுற்றல், மூச்சுத்திணறல், மிகுந்த உடல் சோர்வுடன், உதடுகளும் நிறம் மாறி காணப்பட்டால், உடனே மருத்துவரை அணுகுங்கள்.

**2. வெளுத்துப் போன உதடுகள் உங்களின் உதடுகள் வெளுத்து போய் இருக்கிறதா?**

அப்படியானால் இது இரத்த சோகையால் உடலில் இரத்த ஓட்டம் மோசமாக இருப்பதன் அறிகுறியாக இருக்கலாம் மற்றும் இது உங்கள் இதயம் இரத்தத்தை எவ்வளவு நன்றாகச் சுழற்சி செய்கிறது என்பதற்கான அறிகுறியாகவும் இருக்கும். இத்துடன் கை, கால்கள் எப்போதும் குளிர்ச்சியாக இருந்தால், உடனே மருத்துவரை அணுகி பரிசோதனை செய்து பாருங்கள்.

**3. தொடர்ச்சியான உதடு வறட்சியும்.. வெடிப்புகளும்..**

குளிர்காலத்தில் உதடுகள் வறண்டு போவதும், வெடிப்புகள் ஏற்படுவதும் பொதுவானது. ஆனால் உடலை நன்கு நீரேற்றத்துடன் வைத்துக் கொண்டு, லிப் பாம்களை பயன்படுத்தும், தொடர்ந்து வறட்சியையும், வெடிப்பையும் சந்தித்தால், உடலில் இரத்த ஓட்டம் மோசமான உள்ளது என்று அர்த்தம். அத்துடன் கால் வீக்கம், உடல் சோர்வு போன்ற அறிகுறிகளையும் சந்தித்தால், இதய ஆரோக்கியம் மோசமாக உள்ளது என்று அர்த்தம்.

**4. உதடு வீக்கம்**

ஏதாவது அழற்சி ஏற்பட்டிருந்தால் வீக்கம் ஏற்படலாம். ஆனால் எந்த காரணமும் இல்லாமல் வீக்கத்தை சந்தித்தால், அது உடலில் நீர் தேக்கத்தின் அறிகுறியாகும். வழக்கமாக இது இதய செயலிழப்பினால் ஏற்படலாம். எப்போது உதடுகளில் மட்டுமின்றி, உடலின் கணுக்கால், பாதங்கள், வயிறு போன்ற இடங்களில் திரவங்கள் தேங்குகிறதோ, அது இதய பிரச்சனையின் அறிகுறியாக இருக்கலாம். எனவே காரணமின்றி வீக்கத்தை சந்தித்தால், உடனே மருத்துவரை அணுகுங்கள்.

**5. மரத்துப் போன உதடுகள்**

உதடுகள் மரத்துப் போவது என்பது சாதாரணம் அல்ல, அது மிகவும் தீவிரமான பிரச்சனை. குறிப்பாக இது உடலில் இரத்த ஓட்டம் மோசமாக இருந்தால் நிகழும். எனவே உதடுகளுடன், முகமும் மரத்துப் போவதை கண்டால், அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், உடனே மருத்துவரிடம் செல்ல வேண்டும்.

6. ஆறாத புண்கள் உதடுகளைச் சுற்றியுள்ள பகுதியில் புண்கள் வந்து, அது ஆறாமல் நீடித்திருந்தால், சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அது ஒரு சாதாரண தோல் பிரச்சனையை விட பெரியது. உடலில் இரத்த ஓட்டம் மற்றும் நோயெதிர்ப்பு மண்டலம் மோசமாக இருந்தால் தான், இப்படி புண்கள் ஆறுதல் இருக்கும். எனவே 2 வாரங்களுக்கு மேலாகியும் புண்கள் ஆறாமல் இருந்தால், உடனே மருத்துவரை அணுகுங்கள்.

**(பொறுப்புத் துறப்பு:** மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல் இணையத்தில் கிடைக்கும் அனுமானங்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளன மற்றும் நம்பகத்தன்மைக்கு உத்தரவாதம் இல்லை. மதுரை மணி நாளிதழ் இது, தொடர்பான தகவலை உறுதிப்படுத்தவில்லை. மேலும் எங்கள் ஒரே நோக்கம் தகவலை வழங்குவது மட்டுமே. அதை வெறும் தகவலாக மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும். எந்தவொரு தகவலையும் அனுமானத்தையும் பயிற்சி செய்வதற்கு அல்லது செயல்படுத்துவதற்கு முன், தயவுசெய்து சம்பந்தப்பட்ட நிபுணரை அணுகவும்.)

## காணவில்லை

தேனி மாவட்டம், பெரியகுளம், வடகரை பகவதி அம்மாள் தெரு, க/எண் 1/2 ல் வசித்து வரும் திரு. மணிகண்டன் அவர்களின் மகனான திரு. கார்த்திக் ராஜா அவர்களுக்கு மணிகண்டன் மூலமாகவும் வந்த அசல் மூலப்பத்திரம் பெரியகுளம் சார்பதிவாளர் ஆவண எண் 1292/2007 நம்பர் கொண்டு பதிவு செய்யப்பட்ட மூலப்பத்திரம் பெரியகுளம் தொலைந்துவிட்டது. மேற்கண்ட ஆவணம் பற்றி தகவல் ஏதும் தெரிந்தால் எங்களுக்கு தெரிவிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல் தெரிவிக்க வேண்டிய முகவரி:-
எண்1/2, பகவதி அம்மாள் தெரு வடகரை,
பெரியகுளம், தேனி மாவட்டம்.
தொலைபேசி எண்: 9994524898.

## கூட்டுறவு வங்கியில் கடன்.? அனைத்தும் தள்ளுபடி..?



சென்னை, பிப். 09–

தமிழகத்தில் 2026 சட்டமன்ற தேர்தல் களம் சூடுபிடிக்க தொடங்கிவிட்ட நிலையில், பிரதான கட்சிகளான திமுக மற்றும் அதிமுக இடையே வாக்குறுதிப் போர் உச்சத்தை எட்டியுள்ளது. வாக்காளர்களை கவரும் வகையில் இரு தரப்பிலிருந்தும் கடன் தள்ளுபடி குறித்த அறிவிப்புகள் வெளியாகி வருகிறது. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, தனது தேர்தல் பிரச்சாரங்களில் பல்வேறு கவர்ச்சிகரமான வாக்குறுதிகளை முன்வைத்து வருகிறார். குறிப்பாக, மாணவர்கள் நீண்டகாலமாக சுமந்து வரும் கல்விக்கடன் சுமையை குறைக்கும் வகையில், "அதிமுக மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அனைத்துக் கல்விக் கடன்களும் ரத்து செய்யப்படும்" என்ற அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார். இது தவிர, மாற்றுத்திறனாளிகள் கூட்டுறவுச் சங்கங்களில் பெற்றுள்ள கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்வதாக அவர் வாக்குறுதி அளித்துள்ளார். விளிம்பு நிலை மக்கள் மற்றும் இளைஞர்களின் வாக்குகளைக் குறிவைத்து அதிமுக இந்த வியூகத்தை வகுத்துள்ளது. அதிமுகவின் இந்த அதிரடி அறிவிப்புகளுக்குப் போட்டியாக, ஆளுங்கட்சியான திமுகவும் தனது தரப்பிலிருந்து அதிரடி நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது. ஏற்கனவே 5 சவரன் வரையிலான நகை கடன்கள் தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது கூட்டுறவுச் சங்கங்களில் நிலுவையில் உள்ள மற்ற நகைக் கடன்களையும் தள்ளுபடி செய்வதற்கான பணிகளைத் தமிழக அரசு தொடங்கியுள்ளதாக தெரிகிறது. இதற்கான தகுதியுள்ள பயனாளர்களின் விவரங்களை சேகரிக்க கூட்டுறவுத் துறை அதிகாரிகளுக்கு உயர் மட்டத்தில் இருந்து உத்தரவிடப்பட்டுள்ளது. விரைவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினிடம் இருந்து இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுவதால், பொதுமக்கள் மிகுந்த ஆவலுடன் உள்ளனர்.

## தமிழகத்தில் பத்திரப்பதிவுகளுக்கு கூடுதல் கட்டணம்? விரைவில் முக்கிய அறிவிப்பு?



பத்திரப்பதிவுகளுக்கு கூடுதல் கட்டணம் ரத்து ?

சென்னை, பிப். 09–

தமிழக முழுவதும் சுமார் 590 சார்பதிவாளர் அலுவலகங்கள் செயல்பட்டு வருகிறது. பொதுவாக திங்கள் முதல் வெள்ளிக்கிழமை வரை மட்டுமே பத்திரப்பதிவுகள் மற்றும் இதர பணிகள் நடைபெறும். வார இறுதி நாளான சனிக்கிழமைகளிலும் பத்திரப்பதிவு செய்ய வேண்டும் என்று பொதுமக்களிடம் இருந்து நீண்ட நாட்களாக கோரிக்கை நிலவியது. இதனை தொடர்ந்து கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் அதிகமாக பத்திரப்பதிவு நடக்கும் குறிப்பிட்ட 100 சார் பதிவாளர் அலுவலகங்களில் சனிக்கிழமைகளிலும் பத்திரப்பதிவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வேலைக்கு செல்வோர், வார நாட்களில் விடுமுறை எடுக்க முடியாதவர்கள் போன்றவர்களுக்கு இந்த திட்டம் பெரும் நிம்மதியை அளித்துள்ளது.

**ரூபாய் 1000 சிறப்பு கட்டணம்**

சனிக்கிழமைகளில் பத்திரப்பதிவு செய்யும் நடைமுறை இருந்து வந்தாலும், இதற்கு வழக்கமான பதிவு கட்டணத்துடன் சேர்த்து கூடுதலாக ரூபாய் 1000 சிறப்பு கட்டணம் செலுத்த வேண்டும். பல லட்சங்கள் மதிப்புள்ள சொத்துக்களை பதிவு செய்யும் போது இது பெரிய தொகையாக இருக்காது என்றாலும், சிறிய அளவிலான சேவைகளுக்கும் ரூபாய் 1000 வசூலிக்கப்படுவது சரி இல்லை என்று பொதுமக்கள் மத்தியில் கருத்து இருந்து வருகிறது. இது குறித்து சார்பாளர்கள் கூறுகையில், "சனிக்கிழமைகளில் சொத்து பத்திரப்பதிவுகள் மட்டும் நடைபெறுவதில்லை. வங்கி கடன் தொடர்பான ஆவணவைப்பு, அடமான கடன் முடிப்பு, திருமண பதிவுகள் போன்ற பணிகளும் நடைபெறுகின்றன. பொதுவாக ஒரு திருமண பதிவு அல்லது அடமானம் முடிப்புக்கு அரசின் அடிப்படை கட்டணம் ரூபாய் 50 அல்லது 100 மட்டுமே இருக்கும். ஆனால் சனிக்கிழமைகளில் இந்த வேலைகள் நடைபெற்றால் அதற்கும் ரூபாய் 1000 சிறப்பு கட்டணம் செலுத்த வேண்டி இருக்கும். ரூபாய் 100 மதிப்புள்ள சேவைகளுக்கு சனிக்கிழமை வேலை செய்வதால் மட்டும், ரூபாய் 1000 வசூலிப்பது பொது மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது" என்று தெரிவிக்கின்றனர்.

**கிராமப்புற மக்களின் நிலை**

நகரங்களில் இந்த கட்டணங்கள் பெரிய பாதிப்புகளை ஏற்படுத்துவதில்லை என்றாலும், கிராம பகுதி மக்களுக்கு இந்த கூடுதல் கட்டணங்கள் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகிறது. அவசர தேவைகளுக்காக வங்கி கடன்களை பெறும் விவசாயிகள் அந்த அடமானத்தை பதிவு செய்வது அல்லது விடுவிக்க சனிக்கிழமைகளில் பத்திரப்பதிவு அலுவலகங்களுக்கு வந்தால் தேவையற்ற கூடுதல் செலவுகள் ஏற்படுவதாக கூறப்படுகிறது. சனிக்கிழமைகளில் பத்திரப்பதிவு அலுவலகங்கள் செயல்படும் திட்டம் மக்களுக்காக கொண்டுவரப்பட்டது என்றாலும் இந்த கூடுதல் கட்டணம் வசூலிப்பது பெரும் சுமையாகவே இருந்து வருகிறது. இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கும் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

**அரசின் முடிவு என்ன?**

தற்போது சனிக்கிழமைகளில் குறிப்பிட்ட சில பத்திர பதிவு அலுவலகங்கள் மட்டுமே செயல்பட்டு வரும் நிலையில், அதனை அனைத்து அலுவலகங்களுக்கும் கொண்டு வர அரசு திட்டமிட்டு வருகிறது. இந்நிலையில் அனைத்து அலுவலகங்களிலும் இந்த சிறப்பு கட்டணம் தொடருமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது. பத்திர பதிவுகளுக்கு மட்டும் இந்த 1000 தொகையை வசூலிக்கலாம் என்றும், மற்ற வேலைகளுக்கு இந்த கட்டணத்தை குறைக்கலாம் என்றும் கோரிக்கை எழுந்து வருகிறது. விரைவில் இது தொடர்பான அறிவிப்பு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## Group 2, 2A தேர்வுகள் ரத்தான நிலையில் வரும் 22 ஆம் தேதி நடக்க இருக்கும் தேர்வு குறித்து TNPSC அறிக்கை!






சென்னை, பிப். 09–

சென்னையில் தேர்வு மையத்தில் நடந்த குளறுபடி காரணமாககுரூப் 2, குரூப் 2 ஏ தேர்வுகள் தள்ளி வைக்கப்படுவதாக டிஎன்பிஎஸ்சி தரப்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. தேர்வாணைய கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் ஐஏஎஸ், மீண்டும் எந்த தேதியில் குரூப் 2 மற்றும் குரூப் 2a முதன்மை தேர்வுகள் நடத்தப்படும் என்ற தகவலை வெளியிட்டு இருக்கிறார். இது தொடர்பான அறிக்கையில், 08ஆம் தேதிநடைபெற இருந்த ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான பிரதான தேர்வுகள் தொழில்நுட்ப கோளாறு காரணமாக சென்னையில் மூன்று மையங்களில் நடத்த இயலவில்லை என குறிப்பிடப்பட்டிருக்கிறது. தேர்வுகள் நலனை முன்னிட்டு நடைபெற இருந்த இரண்டு தேர்வுகளும் தமிழ்நாடு முழுவதும் ரத்து செய்யப்பட்டு வேறு தேதியில் நடத்தப்பட உள்ளது என கூறியிருக்கிறார். தேர்வர்கள் அனைவரும் மறுதேர்வு நடைபெறும் நாளுக்கு 15 தினங்களுக்கு முன்பாகவே தேர்வு மையங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஹால் டிக்கெட் விவரம் குறுஞ்செய்தி மற்றும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும் என சுட்டிக்காட்டி இருக்கிறார். அதுமட்டுமில்லாமல் வரும் 22ஆம் தேதி முற்பகல் நடைபெற உள்ள ஒருங்கிணைந்த குடிமை பணிகள் தேர்வு தொகுதி 2, பொது அறிவு தேர்வு தாள் 2 அன்றைய தினமே நடத்தப்படும். அந்த தேர்வு தேதியில் எந்த மாற்றமும் இல்லை என தெரிவித்துள்ளார். இது தொடர்பாக தேர்வர்களுக்கு மீண்டும் சரிபார்த்து ஹால் டிக்கெட் 13ஆம் தேதி அனுப்பி வைக்கப்படும் என கூறியுள்ளார். எனவே தேர்வர்கள் ஏற்கனவே ஹால்டிக்கெட் பெற்றிருந்தாலும் மீண்டும் ஒரு முறை சரிபார்த்து கொள்வது நல்லது. அதே வேளையில் இன்று தேர்வு ரத்தானவர்களுக்கு எல்லாம் தேர்வுக்கு தயாராக கூடுதலாக நாட்கள் கிடைத்துள்ளன என்பதால் அவற்றை பயன்படுத்தி கொள்வது புத்திசாலித்தனம்.

## பிப். 17-ந்தேதி வெளியாகிறது தமிழக சட்டமன்ற தேர்தலுக்கான இறுதி வாக்காளர் பட்டியல்!




சென்னை, பிப். 09–

தமிழகத்தில் நடப்பாண்டு (2026) நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, இந்தியத் தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வரும் 'சிறப்புத் தீவிரத் திருத்தப் பணிகள்' (Special Intensive Revision) நிறைவடைந்துள்ள நிலையில், இறுதி வாக்காளர் பட்டியல் வரும் பிப்ரவரி 17, 2026 (செவ்வாய்க்கிழமை) அன்று அதிகாரப்பூர்வமாக அனைத்து மாவட்டங்களிலும் இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது.




## வேலை வாய்ப்பு

## 5,138 பணியிடங்கள்..! பிஎன்பி வங்கியில் வேலை..

பஞ்சாப் நேஷனல் வங்கி (PNB) நாடு முழுவதும் 5,138 பயிற்சிப் பணியாளர் (அப்ரண்டிஸ்) பணியிடங்களை நிரப்புவதற்கான வேலைவாய்ப்பு அறிவிப்பை வெளியிட்டுள்ளது.. ஆர்வமும் தகுதியும் கொண்டவர்கள் இந்த பணிகளுக்கு விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.. விண்ணப்பதாரர்கள் நாளை, பிப்ரவரி 8, 2026 முதல் வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

பயிற்சிக் காலம் 12 மாதங்கள் ஆகும். இக்காலத்தில், விண்ணப்பதாரர்களுக்கு இரண்டு வாரங்கள் அடிப்படைப் பயிற்சியும், 50 வாரங்கள் பணியிடப் பயிற்சியும் வழங்கப்படும். பதிவு செய்வதற்கான கடைசி தேதி பிப்ரவரி 24, 2026 ஆகும்.

**தகுதி**

விண்ணப்பதாரர்கள் ஜனவரி 1, 2026 நிலவரப்படி 20 முதல் 28 வயதுக்குள் இருக்க வேண்டும். வயது வரம்பில் தளர்வு உண்டு பட்டியல் சாதியினர் (SC) மற்றும் பழங்குடியினருக்கு (ST) ஐந்து ஆண்டுகள், இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு (OBC) மூன்று ஆண்டுகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு (PwBD) 10 ஆண்டுகள். பொதுப் பிரிவு/பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் (EWS) சேர்ந்த விதவைகள் மற்றும் விவாகரத்து பெற்ற பெண்களுக்கு 35 வயது வரையிலும், OBC மற்றும் SC/ST பிரிவினருக்கு 40 வயது வரையிலும் வயது வரம்பில் தளர்வு வழங்கப்படும்.

வங்கியின் கிராமப்புற, பகுதி கிராமப்புற அல்லது நகர்ப்புறக் கிளைகளில் பணிபுரியத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களுக்கு ரூ. 12,300 உதவித்தொகையாக வழங்கப்படும், அதே சமயம் பெருநகரக் கிளைகளில் பணிபுரிபவர்களுக்கு ரூ. 15,000 உதவித்தொகை வழங்கப்படும்.

பயிற்சிச் சான்றிதழைப் பெற, விண்ணப்பதாரர்கள் பயிற்சி காலத்தின் முடிவில் நடத்தப்படும் இறுதி மதிப்பீட்டுத் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

**எப்படி விண்ணப்பிப்பது?**

விண்ணப்பதாரர்கள் வங்கியின் அதிகாரப்பூர்வ இணையதளமான pnb.bank.in/Recruitment அல்லது BFSI SSC-யின் அதிகாரப்பூர்வ இணையதளமான bfsissc.com மூலம் இந்தப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். தேர்வு நடைபெறும் உத்தேச தேதி மார்ச் 2026 முதல் வாரம் ஆகும்.

## கட்ட வரைபடம் தயார் செய்வது குறித்து 47 நாள் பயிற்சி: டிப்ளமோ, பி. இ.,

தமிழக திறன் மேம்பாட்டு கழகம் சார்பில் வெற்றி நிச்சயம் திட்டத்தில் கட்ட வரைபடம் தயார் செய்வது குறித்து 47 நாள் பயிற்சி வழங்கப்படுகிறது. இதில் சேர டிப்ளமோ, பி. இ., படித்தோர் https:// candidate.tnskill.tn.gov.in/ skillwallet/ course/34 இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம். இதை மாண, மாணவிகள் பயன்படுத்திக்கொள்ளலாம்.

## சோழவந்தான் அ/மி ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி பிரதிஷ்டை விழா!



சோழவந்தான், பிப். 09–

மதுரை மாவட்டம் சோழவந்தான் கற்பகம் கார்டன்ஸ் ஆர் எம் எஸ் காலனியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோவிலில் ஸ்ரீ பாலசுப்ரமணிய சுவாமி பிரதிஷ்டை விழா நடைபெற்றது. விழாவையொட்டி ஞாயிறு மாலை முதல் காலயாக பூஜை நடைபெற்றது திங்கள் அதிகாலை நான்கு முப்பது மணிக்கு கணபதி பூஜை உடன் தொடங்கிய இரண்டாம் காலயாக பூஜை நடைபெற்று பூர்ணாஹுதியுடன் நிறைவுற்றது. தொடர்ந்து அருள்மிகு கற்பக விநாயகருக்கும் பாலசுப்ரமணிய சுவாமிக்கும் புனித நீரால் அபிஷேகம் செய்யப்பட்டது. பக்தர்களுக்கு தீபாராதனை காட்டப்பட்டு பிரசாதம் வழங்கப்பட்டது அன்னதானம் நடைபெற்றது ஏற்பாடுகளை கற்பகம் கார்டன்ஸ் ஆர் எம் எஸ் காலனி குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் செய்திருந்தனர்.



பழனி முருகன் கோயிலில் 15 அடி உயர கற்சிலை வேலுக்கு பிப்ரவரி 8–ல், கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதில் அமைச்சர் அர.சக்கரபாணி பங்கேற்றார் அருகில் அறங்காவலர்கள் பாலசுப்பிரமணியம், அன்னபூரணி, உதவி ஆணையர் லட்சுமி, செந்தில்குமார், பில்டிங் காண்ட்ராக்டர் நேரு, கவுன்சிலர் தீனதயாளன் ஆகியோர் உள்ளனர்.





# மக்களவை தலைவர் ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம்...?

டெல்லி, பிப். 09–

மக்களவை தலைவர் ஓம் பிர்லாவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இன்று காலை நடைபெற்ற நாடாளுமன்ற இண்டி கூட்டணி கட்சி தலைவர்கள் கூட்டத்தில் இதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது.குடியரசு தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் நடைபெற்றது. அப்போது உரையாற்றிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, இந்தியா சீனா மோதல் குறித்து முன்னாள் ராணுவத் தளபதி எம்எம் நரவணே எழுதிய நூலில் குறிப்பிடப்பட்டிருந்ததை மேற்கோள் காட்ட முயன்றார். இதற்கு மத்திய அமைச்சர்கள் ராஜ்நாத் சிங், அமித் ஷா உள்ளிட்டோர் எதிர்ப்பு தெரிவிக்க, ராகுல் காந்தி பேசுவதற்கு ஓம் பிர்லா அனுமதி மறுத்தார்.

இதனை கண்டித்து மக்களவையில் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 8 எம்பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர். மேலும், குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்கு பிப்ரவரி 4ந்தேதி மாலை பிரதமர் அளிப்பார் என்று கூறப்பட்ட நிலையில், உரை ரத்து செய்யப்படுவதாக அறிவித்த ஓம் பிர்லா அவையை ஒத்திவைத்தார்.

மக்களவைக்கு உரையாற்ற வரும்போது, பிரதமர் மோடி மீது எதிர்க்கட்சியைச் சேர்ந்த பெண் எம்.பிக்கள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்ததால், அவைக்கு வரவேண்டாம் என்று பிரதமரை தான் அறிவுறுத்தியதாக ஓம் பிர்லா அவையில் விளக்கம் அளித்திருந்தார். அப்போது தமிழக பெண் எம்.பிக்கள் சிலரும் இந்த அவலமான நடவடிக்கைக்கு துணைபோதும் தெரிய வந்தது. இது பெரும் பரபரப்பையும், அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இந்த குற்றச்சாட்டுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இதையடுத்து அவை ஒத்தி வைக்கப்பட்டு, இன்று (பிப்ரவரி 9ந்தேதி) மீண்டும் கூறியது. அவை கூடியதும், எதிர்க்கட்சிகளின் அமளியால் அவை மதியம் வரை ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த நிலையில், மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவர எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளது.

முன்னதாக இன்று காலை காங்கிரஸ் கட்சியின் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சி தலைவருமான கார்கே அறையில் ராகுல்காந்தி உள்பட இண்டி கூட்டணி நாடாளுமன்ற கட்சி தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில், திமுக உள்பட பல கட்சிகளைச்சேர்ந்த எம்.பி.க்கள் கலந்துகொண்டனர். பின்னர், அவை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட நிலையில், இந்திய அமெரிக்க வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டனர். இதை ஏற்க சபாநாயகர் மறுத்துடன் அவையை ஒத்தி வைத்தார்.

இதையடுத்து, எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தின் மகர வாயிலில் இந்தியா–அமெரிக்க வர்த்தக ஒப்பந்தத்திற்கு எதிராகவும் போராட்டம் நடத்தினர். அந்த ஒப்பந்தத்தை "பொறி ஒப்பந்தம்" என்று அழைக்கும் பதாகையை ஏந்தியிருந்தனர். காங்கிரஸ் தலைவர் பிரியங்கா காந்தி வத்ராவும் அவர்களுடன் இணைந்து, மத்திய அரசைக் கண்டித்து, "எது சரியென்று நினைக்கிறீர்களோ அதையே செய்யுங்கள்" மற்றும் "சர்வாதிகாரம் நடக்காது" போன்ற முழக்கங்களை எழுப்பினார்.

முன்னதாக இன்று, ( 09.02.2025 )திமுக எம்.பி. டி.ஆர். பாலு, வர்த்தக ஒப்பந்தத்தின் கட்டமைப்பு குறித்து விவாதம் கோரி லோக் சபாவில் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பைக் கொண்டுவந்தார். அந்த அறிவிப்பைச் சமர்ப்பித்தபோது, அமெரிக்காவிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்படும் சில விவசாயப் பொருட்களுக்கு பூஜ்ஜிய வரி விதிக்கப்படுவது குறித்து திமுக எம்.பி. கவலை தெரிவித்தார்.

இதற்கிடையில், ராஜ்ய சபாவில், பாஜக எம்.பி. சதீஷ் சந்திர துபே, என்.எல்.சி இந்தியா லிமிடெட்டின் செயல்பாட்டு செயல்திறன் குறித்த இந்தியத் தலைமை கணக்குத் தணிக்கையாளரின் அறிக்கையின் நகலை அவையில் சமர்ப்பிப்பார் என்று தெரிவிக்கப்பட்டது.

## டி.என்.பி.எஸ்.சி.யின் புதிய கட்டுப்பாட்டு அலுவலராக வெங்கடபிரியா நியமனம்!

சென்னை, பிப். 09–

தமிழ்நாடு முழுவதும் பிப். 8–ல் நடக்க இருந்த டி.என்.பி.எஸ்.சி. தேர்வுகள் திடீரென ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணை யத்தின் கட்டுப்பாட்டு அலுவலர் சண்முகசுந்தரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரை மாற்றிவிட்டு புதிய கட்டுப்பாட்டு அலுவலராக வெங்கடபிரியா நியமனம் செய்யப்பட்டு உள்ளார்.

# ரெயில்வே திட்டம்: மு.க.ஸ்டாலினுக்கு அஸ்வினி வைஷ்ணவ் பதில்!



சென்னை, பிப். 09–

தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் ரெயில்வே திட்டங்களுக்கான நிதியை விரைந்து வழங்கிடவும், முக்கியமான திட்டங்களை மீண்டும் தொடங்கிடவும், தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக புதிய ரெயில்வே திட்டங்களை அனுமதித்திடவும் ரெயில்வே அமைச்சகத்திற்கு உரிய அறிவுரைகளை வழங்கிடுமாறு கோரி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதி இருந்தார்.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டா லினுக்கு மத்திய ரயில்வே துறை அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளித்துள்ளார்.

அதில், "தமிழ்நாட்டில் ரெயில் திட்டங்களுக்கு தேவையானவற்றில் 24% நிலத்தையே மாநில அரசு கையகப்படுத்தியுள்ளது. நிலம் கையகப்படுத்தியதற்கு ரூ.1,465 கோடி தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்த நிதி ஒதுக்கவில்லை என முதலமைச்சர் கூறியுள்ளது அடிப்படை ஆதாரமற்றது.

மதுரை – தூத்துக்குடி ரெயில்வே திட்டத்திற்கு 91% நிலம் கையகப்படுத்தும் பணி முடியவில்லை. திண்டிவனம் – செஞ்சி திருவண்ணாமலை ரெயில் திட்டத்திற்கு 86% நிலம் கையகப்படுத்தப்பட வில்லை. ராமேஸ்வரம் – தனுஷ்கோடி திட்டத்திற்கு மாநில அரசு ஒத்துழைக்க வில்லை" என்று தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு விற்பனை சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு!

திருப்பூர், பிப். 09–

கூட்டுறவு விற்பனை சங்கங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, 10 சதவீத ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுதும் ஆயிரக்கணக்கான தொடக்க வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் செயல்படுகின்றன. இவற்றில் வங்கி பணி, விற்பனை பணி, பொது வினியோக திட்டம் உள்ளிட்ட பல தரப்பில் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கான ஊதிய உயர்வு உத்தரவை, கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் நந்தகுமார் பிறப்பித்துள்ளார். அதில், சங்கங்களை அதன் வர்த்தக அளவு உள்ளிட்ட வற்றின் அடிப்படையில் தரம் பிரித்தும், அதற்கேற்ப ஊழியர் நியமனம் மற்றும் ஊதிய நிர்ணயம் செய்தும் உத்தரவிடப்பட்டுள்ளது.



இதில், சங்கங்களில் பணியாற்றும் உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் விற்பனை உதவியாளர் பணியிடங்கள் அனைத்தும் உதவியாளர் என, ஒரே பதவியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைமையிடங்களில் பணிநிலைத்திறன் பணியாளர் எண்ணிக்கை மற்றும் தகுதியும் குறிப்பிட்டு, சங்கத்தின் தரத்துக்கு ஏற்ப நியமிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஊழியர்களுக்கு, 10 சதவீத ஊதிய உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் 3 சதவீதம் ஊதிய உயர்வு அனுமதிக்கப்படுகிறது.

அகவிலைப்படி 55 சதவீதம்; வீட்டு வாடகைப்படி; மருத்துவப்படி 300 ரூபாய்; சாவிப்படி 500 ரூபாய்; இடர்ப்படி 300 ரூபாய்; சலவைப்படி 200; வெளியூர் பணிகளின் போது, பதவிக்கேற்ற தினப்படி; மாற்றுத்திறனாளிகள் சிறப்பு படி; மலைப் பிரதேசங்கள்; நகரப்பகுதிக்கான ஈட்டுப்படி ஆகியனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

* 'ஏ' வகை சங்கத்தில் 3,200 முதல் 19,000 ரூபாய் வரையும்; 'பி' வகை சங்கத்தில் 2,900 முதல் 12,100 ரூபாய் வரையும், 'சி' வகை சங்கத்தில் 2,500 முதல் 7 ஆயிரம் ரூபாய் வரையும், 'டி' வகை சங்கத்தில் 2,400 முதல் 9,800 ரூபாய் வரையும் ஊதியம் அதிகரிக்கும். கூட்டுறவு துறை ஊழியர்கள் கூறுகையில், 'புதிய ஊதிய நிர்ணயத்தில் 10 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது. பல்வேறு காரணிகள் அடிப்படையில், பெறப்படும் ஊதியத்தில் 19 சதவீதம் வரை அதிகம் கிடைக்கும்' என்றனர்.

# 'எனக்கு 20 வயது குறைந்திருக்கிறது' - செங்கோட்டையன் பேச்சு!




கோவை, பிப். 09–

கோவையில் நடைபெற்ற த.வெ.க. பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் மாநில நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது;–

"எனக்கு இப்போது 20 வயது குறைந்திருக்கிறது. இளைஞராக ஓடுவதற்கு த.வெ.க. தலைவர் விஜய் என்னை தயார்படுத்தி இருக்கிறார். இரவு, பகல் பாராமல் உழைப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். கொங்கு மண்டலத்தில் உள்ள 29 தொகுதிகளிலும் வெற்றி பெறுவதே எங்கள் லட்சியம். ஒரு நாட்டை மாற்றுவதற்கு நல்ல தலைமை தேவை. முன்னாள் முதல்–அமை ச்சர்கள் எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா ஆகிய 2 தலைமைகளை மக்கள் பார்த்துவிட்டார்கள். ஆனால் அவர்களுக்குப் பிறகு இன்று நடக்கின்ற ஆட்சியில் சட்டம்–ஒழுங்கு சரியில்லை, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. அனைத்தையும் மாற்றக் கூடிய சக்தி த.வெ.க. தலைவர் விஜய்யிடம் மட்டும்தான் இருக்கிறது."

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# காதலர் தினத்தை முன்னிட்டு ஓசூர் ரோஜா பூக்களுக்கு வரவேற்பு அதிகரிப்பு!



ஓசூர், பிப். 09–

ரோஜா உற்பத்தியாளர் சதீஷ் மற்றும் விவசாயிகள் கூறியதாவது:–

வரும் 14–ம் தேதி காதலர் தினக்கொண்டாட்டத்துக்காக ஓசூர் பகுதி ரோஜாவுக்கான உள்நாட்டு வர்த்தகம் களைகட்டியுள்ளது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் ரோஜா பூக்களை கொள்முதல் செய்கின்றனர். தேவை அதிகரித்துள்ள நிலையில், சாகுபடி பரப்பு குறைந்ததால் உற்பத்தி குறைந்துள்ளது. வழக்கமான நாட்களில் 20 பூக்கள் கொண்ட கட்டு ரூ.150–க்கு விற்பனையாகும்.

ஆனால், தற்போது ஒரு கட்டு ரூ.600 முதல் ரூ.800 வரை விற்பனையாகிறது. இது கடந்த 20 ஆண்டுகளில் இல்லாத விலை உயர்வாகும். உள்நாட்டு வர்த்தகத்துக்கு தினசரி 2 லட்சம் ரோஜா மலர்களை விற்பனைக்கு அனுப்பி வந்தோம். தற்போது தினமும் 10 லட்சம் மலர்கள் அனுப்பி வருகிறோம். குறிப்பாக, தாஜ்மகால் ரோஜாவுக்கு 80 சதவீதம் ஆர்டர் கிடைத்துள்ளது. வெளிநாட்டு ஏற்றுமதி பாதிக்கப்பட்ட நிலையில், உள்நாட்டில் வரவேற்பும், விலையும் அதிகரித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சேப்பாக்கத்திற்குள் விசிலுக்கு தடை... சீப்பை மறைத்து வைத்தாலும் கல்யாணம் நடக்கும்..! நாஞ்சில் சம்பத்!



சென்னை, பிப். 09–

2026 டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் 4வது போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் நியூசிலாந்து அணிகள் மோதின. சென்னையில் உள்ள சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இந்தப் போட்டியின் போது சேப்பாக்கம் மைதானத்திற்கு வரும் ரசிகர்களிடம் இருந்து "விசில்" பறிமுதல் செய்யப்பட்டது.

மேலும், மைதானத்திற்குள் விசில் எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்ட சம்பவம் பேசு பொருளானது. சேப்பாகம் மைதானத்திற்குள் மதுபானம், சிகரெட், தண்ணீர் பாட்டில், டிரோன், லேப்டாப் என பல பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றைய போட்டியின் போது ரசிகர்கள் விசில் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டது.

இதுகுறித்து த.வெ.க. பரப்புரை செயலாளர் நாஞ்சில் சம்பத் X தளத்தில் பதிவிட்டுள்ளார். அதில், "சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானத்தில் "விசில்" சத்தம் கேட்டால் சித்தரஞ்சன் சாலையில் இருப்பவர்களுக்கு தூக்கம் போய்விடுகிறது..! சீப்பை மறைத்து வைத்தாலும் கல்யாணம் நடக்கும்..! விசிலின் ஓசையில் தளபதி விஜய்யின் ஆட்சி நடக்கும்..!" என பதிவிட்டுள்ளார்.

முன்னதாக, மைதானத்திற்குள் ரசிகர்கள் விசில் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாதது குறித்து தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் (TNCA) விளக்கம் அளித்தது. அதன்படி, "சேப்பாக்கம் மைதானத்திற்குள் விசில் தடை செய்யப்பட்டதற்கும் பிசிசிஐ, ஐசிசி மற்றும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை. விசிலுக்கு தடை என்ற தகவலை மட்டும் போலீசார் எங்களிடம் தெரிவித்தனர்," என தமிழ்நாடு கிரிக்கெட் வாரியம் தெரிவித்தது.

# 8 ஊராட்சி செயலர்கள் 'சஸ்பெண்ட்'!

கள்ளக்குறிச்சி, பிப். 09–

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், எட்டு ஊராட்சி செயலர்கள், 'சஸ்பெண்ட்' செய்யப்பட்டுள்ளனர்.

கள்ளக்குறி ச்சி மாவட்டத்தில், ஊராட்சியில் வரி வசூல் செய்வதில் உரிய இலக்கினை அடையாதது, பதிவேடுகளை பராமரிக்காதது, பணியில் மெத்தனமாக செயல்பட் டது உள்ளிட்ட காரணங்களால், எட்டு ஊராட்சி செயலர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி, நீலமங்கலம் கோவிந்தராசு, பீளமேடு மாணிக்கம், வடமருதுார் மோகன், வஞ்சிக்குழி ராமகண்ணு, வடபொன்பரப்பி பழனி, பு.மலையனுார் ராமலிங்கம், சீர்ப்பனந்தல் குமார், ராயப்பனுார் ராஜவேலு ஆகிய எட்டு பேரை, சஸ்பெண்ட் செய்து, அந்தந்த கிராம ஊராட்சி பி.டி.ஓ.,க்கள் உத்தரவிட்டுள் ளனர்.

இதுதவிர, மாவட்டம் முழுதும், 47 ஊராட்சி செயலர்கள் வேறு ஒன்றியங்களுக்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

# 2 நாட்கள் மலேசிய பயணம் நிறைவு... நாடு திரும்பிய பிரதமர் மோடி!




டெல்லி, பிப். 09–

இரண்டு நாட்கள் மலேசிய பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் நரேந்திர மோடி நாடு திரும்பினார் .

பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக மலேசியா சென்றார். மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமின் அழைப்பை ஏற்று இரண்டு நாள் அரசு முறைப் பயணமாக பிரதமர் மோடி மூன்றாவது முறையாக மலேசியா சென்றிருந்தார்.

இதில் 2024 ஆகஸ்டில் இரு நாடுகளுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட "விரிவான மூலோபாயக் கூட்டாண்மை" (Comprehensive Strategic Partnership) நிலையை மேலும் வலுப்படுத்துவது குறித்து இரு தலைவர்களும் விரிவான பேச்சுவார்த்தைகளை நடத்தினர்.

மேலும், பாதுகாப்பு, செமிகண்டக்டர் (Semiconductors), வர்த்தகம், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்த 11 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

கோலாலம்பூரில் இந்திய வம்சாவளியினர் மத்தியில் உரையாற்றிய பிரதமர், "தமிழ் மொழி உலகிற்கே இந்தியா அளித்த மாபெரும் பரிசு" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார். மலேசியாவில் இந்தியாவின் புதிய தூதரக அலுவலகம் (Consulate) திறக்கப்படும் என்றும், இந்திய மாணவர்கள் பயன்பெற "திருவள்ளுவர் கல்வி உதவித்தொகை" (Thiru–valluvar Scholarship) வழங்கப்படும் என்றும் மோடி அறிவித்தார்.

## சினிமா துளிகள்..!

### காதலர் தின ஸ்பெஷல்: இந்த வாரம் காதலர் தினத்தில் வெளியாகும் படங்கள்!



ஒவ்வொரு ஆண்டும் காதலர் தினம் பிப்ரவரி 14 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது. இந்த தினத்தில் பக்க புதிய படங்களோடு சில கிளாசிக் பழைய காதல் படங்கள் ரீ ரிலீஸாகும். அந்தவகையில் இந்த ஆண்டும் காதலர் தினத்தை ஒரு நாள் முன்னிட்டு அதாவது பிப்ரவரி 13 ஆம் தேதி பல புதிய படங்களும், பல ரீ ரிலீஸ் படங்கள் வெளியாகின்றன. அவற்றின் பட்டியலை இங்கே காணலாம்.

**மின்னலே ரீ ரிலீஸ்:**

இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் மாதவன் மற்றும் ரீமா சென் நடிப்பில் உருவான திரைப்படம் 'மின்னலே'. காதலர் தினத்தை முன்னிட்டு பிப்ரவரி 13 ஆம் தேதி தமிழகம் முழுவதும் மீண்டும் வெளியாகிறது.

**மௌனம் பேசியதே ரீ ரிலீஸ்:**

2022 ஆம் ஆண்டு வெளியான சூப்பர் ஹிட் திரைப்படம் மௌனம் பேசியதே (Mounam Pesiyadhe). இத்திரைப்படத்தில் சூர்யா, த்ரிஷா, லைலா மற்றும் பலர் நடித்துள்ளனர். இந்த படம் பிப்ரவரி 13 ஆம் தேதி தமிழகம் முழுவதும் மீண்டும் வெளியாகிறது.

**தலைவர் தம்பி தலைமையில்:**

நிதிஷ் சகாதேவ் இயக்கத்தில் ஜீவா நடித்து கடந்த பொங்கலுக்கு வெளியான திரைப்படம் தலைவர் தம்பி தலைமையில். இந்த திரைப்படம் பிப்ரவரி 12ம் தேதி முதல் நெட்பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் ஸ்ட்ரீம் ஆக உள்ளதாக வெளியாகியுள்ளது.

**பூக்கி:**

விஜய் ஆண்டனி தயாரிப்பில் அவருடைய உறவினர் அஜய் திஷன் ஹீரோவாக நடித்திருக்கும் ரொமான்டிக் காமெடி படமான பூக்கி படமும் பிப்ரவரி 13–ம் தேதி வெளியாகிறது.

**கா:**

ஆண்ட்ரியா முதன்மை கதாபாத்திரத்தில் நடித்த அட்வென்ச்சர் திரில்லர் படமான 'கா' திரைப்படம் பிப்ரவரி 13–ம் தேதி வெளியாக திட்டமிடப்பட்டுள்ளது.

**பிற புதிய படங்கள்:**

இந்த படங்களைத் தவிர மை லார்டு, ஸ்வீட்டி நாட்டி கிரேசி ஆகிய படங்களும் பிப்ரவரி 13–ம் தேதி வெளியாகப் போவதாக கூறப்படுகிறது.

## தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020